10.09.2025 Mcop 32/2021 எ.ம.சா.2 கண்ணதாசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சம்பந்தமாக ஆம்புலன்ஸ் டிரைவர் மீது முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும், டி.என்.09.ஏ.இ 8215 என்ற காரின் ஒட்டுனரும் விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனமும், காரின் காப்பீட்டு நிறுவனமான 2ம்எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரிதான்.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் நான் 3ம்எதிர்மனுதாரர் என்றால் சரிதான். எதற்காக என் மீது மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் வழக்கறிஞர்மூலமாக பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4ம்எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் மூலம் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் மனுதாரரை பார்த்து இல்லை. விபத்து நடந்த தேதியில் அரசு பேரூந்தை நான் தான் ஒட்டி சென்றேன். அந்த பேரூந்தை நான் திருநெல்வேலியில் இருந்து சென்னைக்கு ஒட்டி சென்றேன். நான் ஒட்டி சென்ற வாகனத்தின் எண் ஞாபகம் உள்ளதா என்றால் டி.என்.72.என்.1924 ஆகும். மனுதாரர் எனது வாகனத்திற்கு முன்னால் ஆம்புலன்ஸை ஒட்டி சென்றார் என்றால் சரிதான். முன்னே சென்ற காரின் மீது ஆம்புலன்ஸ் மோதி டயர் வெடித்து ஆம்புலன்ஸ் நான் ஒட்டி சென்ற வண்டி மீது மோதியது. இந்த விபத்தானது தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு ஆம்புலன்ஸ் ஒட்டுனரின் கவனக்குறைவு தான். 1ம்எதிர்மனுதாரர் வாகனத்தை திடீரென பிரேக் பிடித்ததால் காரின் பின்னால் சென்று

கொண்டிருந்த மனுதாரர் ஓட்டி சென்ற ஆம்புலன்ஸ் மீது இடித்தது என்றும், நானும் நிலை தடுமாறி ஆம்புலன்ஸ் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. ஒருவேளை காரின் டிரைவர் ஓரமாக சென்றிருந்தால் ஆம்புலன்ஸ் காரின் மீது மோதி எனது வாகனத்தின் பக்கம் திரும்பி இருக்காது என்றால் சரியல்ல. நானும் எனது வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து ஆம்புலன்ஸ் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால்சரியல்ல. நான் கவனமாக ஓட்டியிருந்தால் இந்த விபத்து தவிர்க்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. விபத்திற்கு நானும், ஆம்புலன்ஸ் முன்னால் சென்றிருந்த காரின் ஓட்டுனரும் தான் காரணம் என்றால் சரியல்ல. நானும், காரின் ஓட்டுனரும் கவனமாக செயல்பட்டிருந்தால் விபத்து நடைபெற்றிருக்காது என்றால் சரியல்ல. விபத்தினால் மனுதாருக்கு இடுப்புக்கு கீழ் செயல்பட முடியாத நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. விபத்தினால் மற்றவர்களின் உதவி இல்லாமல் மனுதாரர் எந்த வேலையும் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு நானும், 1ம்எதிர்மனுதாரர் மட்டுமே பொறுப்பு என்றால் சரியல்ல. மனுதாருக்கு எங்கள் போக்குவரத்து கழகமும், 2ம்எதிர்மனுதாரரும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.